# தமிழகம் — ஒரு கலைக்களஞ்சியம்

டி. எஸ். பார்த்தசாரதி

இயல், இசை, நாடகம் என்ற பெயருடன் மூன்று வகையாகப் பகுக்கப் பெற்று வழங்குவது தமிழ் மொழிக்குத் தனிச் சிறப்பை அளிக்கும் ஓர் அம்சம் ஆகும். சிறந்த நடையோடு கூடி இலக்கணம் அமைந்த தமிழ் இயல் ஆகும். பண், தாளம், மொழிப்பாட்டு இம்மூன்றும் வேறுபடாமல் அமைந்திருப்பது இசைத் தமிழ். நாடகம் என்பதற்கு விளக்கம் தேவை இல்லை. ஒரு கதையை அடிப்படையாகக் கொண்டு அரங்கின் மீது நடிகர்கள் வசனம், இசை, ஒப்பனை முதலியவற்றின் உதவி கொண்டு நடிப்பது நாடகம். இம்மூன்றும் தமிழில் ஒரு கொத்தாக வழங்குவது போல உலகில் வேறு எம்மொழியில் வழங்குவது இல்லை.

முத்தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்திய முனிவர் இயற்றிய சிற்றகத்தியம், பேரகத்தியம் என்ற நூல்களும் இவ்விதமே பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் முதலிய நூல்களும் மறைந்து விட்டபோதிலும் தமிழிசையின் மரபு மாத்திரம் இன்று வரை நிலவி வருகிறது. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் என்று கருதப் பெற்ற போதிலும் பழந்தமிழரின் நாகரிகம், இசை, நடனம் ஆகியவற்றிற்கு அது ஒரு கருவூலமாகவே விளங்குகிறது.

கிரேக்க நாட்டைப் போலவே தமிழகத்தின் ஐவகை நிலப்பாகுபாடுகளை ஒட்டிப் பண்களின் பெயர்கள் இடப்பெற்றன என்பதற்குப் பாலையாழ், குறிஞ்சிப்பண், மருதயாழ், முல்லையாழ் முதலிய சொற்களே சான்றாகும். இவ்விதமே வெவ்வேறு பறைகளும் வழங்கி வந்தன. தென்னிந்திய இசையின் இலக்கணத்தை விவரிக்கும் நூல்களில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய நூல் தொல்காப்பியமேயாகும். அக் காலத்தில் வேறு இசை முறை வழக்கில் இல்லாததால் தமிழ்நாட்டின் இசைக்குத் தனியான பெயர் குறிப்பிடப் பெறவில்லை.

தொல்காப்பியத்திற்கு அடுத்தாற்போல் நம் கவனத்தை ஈர்க்கும் இசை நூல் இருபத்து நான்கு பாடல்களைக் கொண்ட பரிபாடல் ஆகும். ஆதியிலிருந்தே இவை இசையுடன் பாடப் பெற்று வந்தன என்பதற்குக் குறிப்புக்கள் பரிபாடலிலேயே காணப் பெறுகின்றன. பன்னிரு புலவர்க இயற்றிய இருபத்து மூன்று பாடல்களுக்குப் பதினோரிசையாசிரியர்கள் இசை அமைத்துள்ளனர். ஒருவர் மட்டும் தம் பாடல்களுக்குத் தாமே இசை அமைத்துள்ளார்.

### சிலப்பதிகாரம்

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் வழங்கிய இசையைக் குறித்து ஆராய்ச்சி செய்ய விரும்புவோருக்கு ஒரு புதையல் போல் விளங்கும் தலைசிறந்த நூல் சிலப்பதிகாரம் ஆகும். தமிழ் மொழியில் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தைத் தனியான ஓர் இசைநூல் என்று கூறுவதற்கு இல்லை. எனினும் முத்தமிழுக்கு இதைவிடச் சிறந்த இலக்கணம் தமிழில் இல்லை எனலாம். இசை நுணுக்கங்கள் நூல் முழுவதுமே பரவியுள்ளன. ஆயினும் அரங்கேற்று காதை, கடலாடுகாதை, கானல்வரி, வேனிற்காதை, ஆய்ச்சியர் குரவை ஆகிய பகுதிகளில் இசை இலக்கணம் தெளிவாகப் பேசப்படுகிறது.

இக்காலத்தில் வழங்கும் நவீன மின்சார சாதனங்களின் உதவியின்றியே பழந்தமிழர் 22 சுருதிகளையும் இளிக்கிரமம் என்ற முறைப்படி புதிய பாலைகள் தோன்றும் உண்மையையும் கண்டறிந்தனர். பற்பல இசைக் கருவிகளும் அவற்றை இசைக்கும் முறைகளும் சிலப்பதிகாரத்தில் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

அரும்பதவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார் ஆகிய இருமேதைகளின் ஒப்பற்ற உரைகளின் உதவியின்றி நாம் சிலப்பதிகாரத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளுதல் அரிது. இவ்விரு உரையாசிரியர்களும் தமது காலத்துக்கு முன் இருந்த இசை நூல்கள் அனைத்தையும் நன்கு பயின்றிருக்க வேண்டும் என்பது அவர்கள் எடுத்தாண்டிருக்கும் கணக்கற்ற மேற்கோள்களிலிருந்து தெளிவாகிறது.

ஏழு சுரங்களுக்குக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற தமிழ்ப் பெயர்கள் வழங்கி வந்தன. ச ரி க ம ப த நி என்ற அட்சரங்கள் சிலப்பதிகாரத்தில் காணப் பெறவில்லை. இவை ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் ஒருவன் செதுக்கியுள்ள குடுமி யான் மலைக் கல்வெட்டில் முதன் முதலாகக் காணப்பெறுகின்றன.

'ஈரேழு தொடுத்த செம்முறைக் கேள்வியின்' என்று தொடங்கும் பகுதியே இசைக்கலைஞர் களுக்கு மிகவும் முக்கியமானதாகும். இதில் தான் 14 நரம்புகளுடைய யாழிலிருந்து செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேர்ச்செம்பாலை ஆகிய ஏழு பாலைகளும் தோன்றும் உண்மை குறிப்பிடப் பெறுகின்றது. குரவைக்கூத்தை விளக்கும் இடத்தில் இளங்கோ அடிகள் வட்டப்பாலை என்ற ஒரு வட்டத்தை வகுத்து அதில் ஏழு சுரங்களும் ஏழு பெண்களாக நின்று ஆடுவது போல் காட்டி இராசி வட்டத்தில் சுரங்களின் அமைப்பைப் பொருத்தியுள்ளது வியக்கத்தக்க ஒரு சாதனையாகும். ஆசிரியர் இத்துணை அழகாக வருணித்திருக்கும் இசைக் கலையின் மூலம் கானல் வரியில் கோவலனுக்கும் மாதவிக்கும் கருத்து வேற்றுமை தோன்ற, காப்பியமே அவலச் சுவையில் முடிவது நமக்கு வேதனையைத் தருகிறது.

## தேவாரமும் பிரபந்தமும்

சிலப்பதிகார காலத்துக்குப் பின்னர் தமிழ் நாட்டில் இன்னிசை பெருக்கெடுத்து நாயன் மார்களின் தேவாரம், ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தம் ஆகியவற்றில் நிரம்பி வழிந்தது. சிவனடியார்களும், வைணவக் குரவர்களும் இசை வல்லுநராக விளங்கித் தாம் இயற்றிய பாடல்களுக்குத் தாமே இசை அமைத்தனர். அக்காலத்தில் யாழ் என்ற கருவியே இசைக்குப் பக்க வாத்தியமாக வழங்கி வந்தது என்று வரலாறுகளிலிருந்து அறிகின்றோம். ஞானசம் பந்தர் திருக்கோவில்களில் பதிகங்கள் பாடிய போது திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது கருவி கொண்டு உடன் வாசித்ததாகவும் தெரிய வருகிறது.

தேவாரம், பிரபந்தம் ஆகியவற்றின் இசை மறைந்து போகாமல் காத்தளித்த பெருமை முறையே நம்பியாண்டார் நம்பி, நாதமுனிகள் என்ற இருபெரியார்களைச் சார்ந்ததாகும். நாதமுனிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் அரும் பாடுபட்டுப் பாசுரங்கள் அனைத்தையும் திரட்டி அவற்றிற்குப் பழைய மரபையொட்டி இசை அமைத்து வழங்கினார். இவ்விதமே பிற்காலத்துத் தோன்றிய நம்பியாண்டார் நம்பியும் தேவாரப் பதிகங்களைத் திரட்டி திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மரபில் வந்த ஓர் அம்மையாரின் உதவி கொண்டு அவற்றிற்கு இசை வழங்கி அளித்தனர். தமிழிசையின் மரபு அழியாவண்ணம் இத்தகைய தொண்டாற்றிய இவ்விரு வள்ளல் களுக்கும் தமிழ் இசை உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

அண்மையில் செய்யப் பெற்று வந்த பண் ஆராய்ச்சியின் வாயிலாகத் தேவாரம், பிரபந்தம் ஆகியவற்றின் பண்களின் இலக்கணம் கண்டு பிடிக்கப் பெற்று அவற்றிற்குப் பொருத்தமான கர்நாடக இராகங்கள் எவை என்பதும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிங்கல நிகண்டு என்ற தமிழ்க்களஞ்சியத்தில் 103 பண்களின் பட்டியல் ஒன்று காணப் பெறுகிறது. பிற்காலத்தில் கடலெனப் பெருகிய கர்நாடக சங்கீதம் என்ற இசை முறைக்கு மேற் கூறியவையே அடிப்படை என்பதில் ஐயமில்லை.

## நாட்டியம்

சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் பழந் தமிழரின் பலவகை நாட்டியங்கள் கூறப் பெறு கின்றன. மூலத்தில் காணப்பெறும் அல்லியக் கூத்து, மல்லாடல், குடக்கூத்து ஆகியவற்றை விவரிக்கும் போது உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கண்ணன் ஆடிய பத்துவகைக் கூத்துக் களைக் குறிப்பிடுகிறார். சிவபெருமான் திரிபுரங் களை எரித்த பின்னர் ஆடிய நடனங்கள் கொடு கொட்டியும் பாண்டரங்கமும் ஆகும். முருகன் ஆடியது துடி என்றும், துர்க்கை ஆடியது மரக்கால் என்றும் திருமகள் ஆடியது பாவை என்றும் விளக்கப்படுவது இக்கால நாட்டிய ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் சுவை தரும் செய்தி களாம். சில நாட்டியங்களை இளங்கோ அடிகள் தேசிக் கூத்து என்று குறிப்பிடுவதால் அக்காலத்தில் தமிழ் நாட்டில் பரதரின் நாட்டிய சாத்திரத்தைப் பின்பற்றிய மார்க்க நடனமும் வழங்கி வந்திருக்க வேண்டும்.

தற்பொழுது பரதநாட்டியம் என்ற பெயருடன் வழங்கிவரும் சதிர் நாட்டியம் தமிழகத்துக்கே உரிய ஒரு நாட்டிய வகையாகும். மாதவி பதினொருவித நாட்டியங்கள் ஆடியதாகக் கூறும் இளங்கோ அடிகள் அவற்றிற்காக அவள் கொண்ட கோலங்களை ஒப்பனைக்கலை நிபுணரைப் போல் வருணிக்கிறார். இதைப் படிக்கும் போது மாதவி ஆடிய நடனங்கள் சதிர் நாட்டியத்துக்கு ஆதாரமாக உள்ளன என்றே தோன்றுகிறது.

## அருணகிரிநாதர்

பதினைந்தாம் நூற்றாண்டில் இசைத்துறையிலும் சந்தக் கவி இயற்றும் துறையிலும் ஒரு புரட்சியைத் தோற்றுவித்தவர் திருப்புகழின் ஆசிரியரான அருணகிரிநாதர். அவருடைய காலத்தில் வழங்கி வந்த இராக தாளங்களைப் பற்றித் திருப்புகழிலேயே நிரம்ப விவரங்கள் கிடைக்கின்றன. தாளங்களைப் பொறுத்த வரையில் அருணகிரிநாதர் தன்னிகரற்ற முடிசூடா மன்னராக விளங்குகிறார். திருப்புகழில் காணப் பெறும் தாளங்கள் அனைத்தையும் இன்றுவரை எந்த ஆராய்ச்சியாளரும் கணக்கெடுத்து அவற்றின் இலக்கணத்தை அறிந்து வகுக்கவில்லை.

## முடிவுரை

ஆகவே தொல்காப்பிய காலம் முதல் இன்று வரை இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளுக்குத் தமிழகம் ஒரு களஞ்சியமாகவே விளங்கி வருகிறது. இக்கலைகளின் நுட்பங்களைப் பல ஆசிரியர்கள் தாம் இயற்றிய நூல்களில் தக்க இடங்களில் பொதித்து அவற்றை அனைவரும் கற்றுப் பயன் பெறுமாறு செய்துள்ளனர். இயலுடன் இசையும் நாடகத்தையும் ஒருங்கிணைந்து எழுதப் பெற்றுள்ள ஒப்பற்ற நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பெருமை தமிழகத்தைச் சார்ந்தது ஆகும் என்பது ஒவ்வொரு தமிழனும் நினைந்து மகிழ்வதற்கு உரிய பேறாகும். ●


*Compliments From*

**GREAT SHOE UPPERS CORPORATION**

A-26, Industrial Estate,

GUINDY,

**MADRAS - 600 032**